
# பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



## மாத இதழ்

மே 2015

மலர் 15 இதழ் : 12

# நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்

சக. 10:12



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ளவர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையால் இந்த வருடத்தின் 5 – ம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்தபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். கடந்த மாதம் நடந்த விசேஷ ஆராதனைகள் மற்றும் ஊழியங்கள் எல்லாவற்றிலும் தேவ பிரசன்னம் இருந்தபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் விசேஷித்த ஆராதனைகள் மற்றும் ஊழியங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். **""கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்""** (2 கொரி. 2:14).

**1.நம்மை எப்பொழுதும் வெற்றி சிறக்கப்பண்ணுகிறவர் நாம் ஆராதிக்கிற தேவன்: –** நம்மை கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வெற்றி சிறக்கப் பண்ண வேண்டுமானால் நாம் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும்: சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். தோல்வியடைய தேவன் நம்மை தெரிந்து கொள்ளவில்லை. நம்முடைய தோல்விகளையெல்லாம் இயேசு சிலுவையில் ஜெயம் எடுத்துவிட்டார். சோர்வுகளை எல்லாம் சிலுவையில் ஜெயமாய் மாற்றிவிட்டார். நாம் அதை விசுவாசித்து வாயினால் அதை சொல்ல வேண்டும். நம்மை தோல்வியடைய முயற்சி பண்ணுகிறவன் சாத்தான் தான். ஆனால் அவனுடைய அதிகாரங்களை எல்லாம் இயேசு உரிந்து கொண்டு சிலுவையில் வெற்றி சிறந்தார் (கொலோ. 2:15). இப்போது அவனிடம் எந்த அதிகாரமும் இல்லை. ஆனால் அந்த அதிகாரங்களை தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கும் எனக்கும் தந்திருக்கிறார். ஆனபடியால் அவர் நமது தோல்வியை ஏற்கனவே ஜெயமாக மாற்றிவிட்டார்.

**2. எங்களைக் கொண்டு அவரை அறிகிற வாசனையை வெளிப்படுத்துகிற தேவன் (2கொரி. 2:14): –** இந்த மாதத்தில் ஆண்டவரை (இயேசுவை) அறிகிற வாசனையை நம் மூலம் வெளிப்படுத்த தேவன் விரும்புகிறார். நம்முடைய வேலை ஸ்தலத்தில், குடும்பத்தில், சபையில் அவரை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்று தீர்மானிப்போம். இதுவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நம்முடைய சிந்தனை அவரை வெளிப்படுத்த வேண்டும். பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று

தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. –ஆதி. 9:26

சொல்லும் போது இதை பிதாவாகிய தேவன் தான் உனக்கு வெளிப்படுத்தினார் என்று இயேசு சொன்னார். ஆண்டவரை குறித்த வெளிப்பாடுகளை நாம் பெற்றால் தான் அவர் எப்படிப்பட்ட தேவன் என்பதை நாம் வெளிப்படுத்த முடியும்.

பேதுரு இந்த வெளிப்பாட்டை பெற்றிருந்தான். நாமும் இந்த தேவனை, ஜீவனுள்ள ஆண்டவரை உணர முடியும், காண முடியும், அவருடன் பேச முடியும். இப்படிப்பட்ட அனுபவம் கிடைக்க வாஞ்சிப்போம். அப்போஸ்தலர் எப்போதும் எல்லா இடங்களிலேயும் சொன்ன வாசனை என்னவென்றால் இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் அதற்கு நாங்கள் சாட்சிகள் என்று சொல்லி அவருடைய வாசனையை வெளிப்படுத்தினர். நம்மையும் இந்த நாட்களில் எல்லா இடங்களிலேயும் வெற்றி சிறக்கப்பண்ணி அவருடைய வாசனையை நம் மூலம் வெளிப்படுத்தப்பண்ண நம்மை தாழ்த்துவோம்.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

---

## சபையின் 2015-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# "... ... ... நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்"

ஆமோஸ். **5:14**

---

## சாட்சி

**எனது மகள் சாராவுக்கு விஷப்பூச்சி கடியினால் ஏற்பட்ட புண்களிலிருந்து கர்த்தர் பரிபூரண சுகம் தந்ததற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- சகோ. வாட்சன்**

தேவ செய்தி

# பலப்படுத்துகிற கர்த்தர்



தேவனுக்கே மகிமை உண்டாவதாக! **““நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்: அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்து கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்””** சக. 10:12.

கர்த்தரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த இதழின் மூலம் உங்களோடு தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் இந்த மாதத்திலும் சகரியா 10:12 —ன்படி உங்களை பலப்படுத்தி நடத்த தேவனுக்குள்ளாக உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய நம்மை எப்பொழுதும் பலப்படுத்துகிறவராகவே இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கி கானானுக்குள் பிரவேசிக்க செய்கிறவரையிலும் அவர்களில் ஒருவருக்காகிலும் பலவீனமோ சுகவீனமோ அணுகாதபடி பார்த்து வழி நடத்தினாரென்றால் நம்மையும் எல்லா வாதைக்கும் தீமைக்கும் விலக்கி மீட்டு வழி நடத்துவது நிச்சயம் (சங்கீதம் 121, சங்கீதம் 91). அவர் அவருடைய பிள்ளைகளாகிய நம்மை பலவிதங்களிலும் பலப்படுத்துவார். இடிந்துகிடக்கிற, சீர்குலைந்திருக்கிற, கட்டமுடியாமல் தவிக்கிற எந்த சூழ்நிலையாயிருந்தாலும் கர்த்தர் நம்மை பலப்படுத்துவார். எப்பொழுது நம்மை பலப்படுத்துவார் என்றால் அவருடைய ஜனமாகவும் அவர் மேய்சலின் ஆடுகளாகவும் நாம் இருக்கும்போது மட்டுமே அவர் நம்மை பலப்படுத்தமுடியும் (சங். 29:11). இப்படிப்பட்ட சீரைப் பெற்ற ஜனமாக இருக்கிறோம் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார்.

## நம்முடைய பாதுகாப்பை பலப்படுத்துகிற கர்த்தர்

கி.மு 605 — 536 வரை உள்ள 70 பாபிலோனிய சிறையிருப்புக்கு பின் தேவன் எருசலேம் அலங்கத்தைக் கட்ட தேவன் நினைவு கூர்ந்தபடியால் எஸ்றாவை தேவன் அனுப்பினார். தொடர்ந்து செருபாபேல் மற்றும் நெகெமியா போன்ற பக்தர்களை தேவன் எழுப்பினார். இடிந்துகிடந்த அலங்கத்தை எழுப்ப, பலப்படுத்த கர்த்தர் அநேகரை எழுப்பினார் என்றால் பெலவீனப்பட்டுள்ள நம்முடைய சீர சுகம், மனசமாதானம் மற்றும் வாழ்வின் ஆசீர்வாதங்கள் யாவற்றையும் கர்த்தர் பலப்படுத்துவது மிக சாத்தியமும் சத்தியமும் கூட. நம்முடைய அடைக்கலம் கர்த்தர் என்று வரும்போது நம்முடைய பாதுகாப்பு தேவன் தான் என்று அண்டிக் கொள்ளும்போது தேவன் எப்படி பர்வதங்கள் எருசலேமை சுற்றிலும் இருக்கிறதோ அதைப் போல கர்த்தர் இதுமுதல் என்றென்றும் நம்மை சூழ்ந்து பாதுகாக்கிறார். (சங் 125:2, சக. 2:5)

நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி; உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம். –1நாளா. 29:13

## நம்முடைய நம்பிக்கையை பலப்படுத்துகிற கர்த்தர்

ஒரு சிறிய செடி மழை வெள்ளத்தில் மண்ணரிப்பு ஏற்பட்டு வெள்ளத்தில் அடித்துச் செல்லக் கூடிய நிலையில் தோட்டக்காரன் அதின் அடிப்பகுதியில் மண் வைத்து அதின் வேரை பலப்படுத்தி அதை உறுதியாக நிலைக்கச் செய்வது போல கர்த்தர் நம்முடைய நம்பிக்கை அற்றுப் போகும் நேரத்திலும், நம்முடைய முயற்சிகள் வீண் என்று சோர்ந்து போகும் வேளையிலும் கர்த்தர் நம்முடைய நம்பிக்கையின் நங்கூரமாய் இருந்து நம்மை பலப்படுத்தி நிலைக்கச் செய்வார். நாம் அவருக்குள் நிலைத்திருந்தால் கர்த்தர் நிலைப்படுத்தி சகாயம் செய்வார். கர்த்தருடைய பலப்படுத்துதல் இல்லாமல் மனிதர்களின் உதவி ஒத்தாசைகள் நம்மை நித்தியத்திற்குள் ஒருபோதும் நடத்தாது. இதை அறிந்து கர்த்தர் நம்மை பலப்படுத்த அவரையே அண்டிக்கொள்வோம். (எபி. 6:19, நீதி 3:26)

## நம்முடைய பரிசுத்தத்தை பலப்படுத்துகிற கர்த்தர்

தேவன் நம்முடைய பரிசுத்த வாழ்க்கையை பலப்படுத்துவார். நாம் கர்த்தரை தரிசிக்கக் கூடாது என்று சொல்லி சத்துரு எவ்வளவாய் நம்மை தீட்டுப்படுத்தினாலும் தம் சொந்த குமாரனுடைய இரத்தத்தினால் கழுவி, வார்த்தையினால் நிலைப்படுத்தி தம் ஆவியினால் நம்மை பரிசுத்தமாக்குகிறார். (1யோவா. 1:7, யோவா. 17:17, 1கொரி 6:11 ). ஏனென்றால் பரிசுத்தமில்லாமல் கர்த்தரை தரிசிக்க முடியாது. அவர் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார். நாம் அவரை பார்க்க வேண்டும் என்ற சித்தத்திற்காக நம்மை பரிசுத்தத்திலே பலப்படுத்தி நிலைநிறுத்தி காக்கிறார். பரிசுத்தமாய் அவரை ஆராதிப்போம்: பரிசுத்தமாய் நிலைத்திருப்போம்: நிச்சயமாய் கர்த்தர் நம்மை பலப்படுத்துவார்.

## கடைசியாக என் சகோதர! சகோதரியே!

தேவன் உன்னை பலப்படுத்துகிற நோக்கமே அவரோடு நீ நடப்பதற்காகத்தான். ஏனோக்கு தேவனோடு நடந்தான், அவன் தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டான். தேவனோடு நடப்பது விசுவாசத்திலே, பரிசுத்தத்திலே பாதுகாப்பாய் நடக்கவே தேவன் நம்மை பலப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருநாளும் ஆவியினாலே பலப்படுத்தப்பட்டு வார்த்தையினாலே பரிசுத்தமாக்க ஒப்புக் கொடுப்போம். தேவகிருபை நம்மை பாதுகாக்கும். கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

**கர்த்தரின் பணியில்**
**Pas. ஆமோஸ் விஜயகுமார்**

என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் பழக்குவிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். _சங். 144:1

மறக்கமுடியுமா!

# மாம(பு)னிதர் சார்லெட் லோட்டி மூன்

## (1840 – 1912)

சார்லெட் லோட்டி மூன் 1840 –ம் ஆண்டு டிசம்பர் 12–ம் தேதி அன்று வியுமௌண்ட் வெர்ஜீனியா, அமெரிக்கா தேசத்தில் பிறந்து, பெற்றோருக்குச் சொந்தமான பெரியப் பழத்தோட்ட எஸ்டேட்டில் அவர் வளர்ந்து வந்தார். அவருக்கு உடன் பிறந்த 6 சகோதர, சகோதரிகளும் உண்டு. அவர்கள் செல்வந்தர்களாக இருந்தபடியால் ஆசிரியர்கள் வீட்டிற்கு வந்து கல்வி புகட்டினர். லோட்டி மூன் 12 வயதாயிருக்கும் போது வியாபாரம் சம்பந்தமாக வெளியூர் சென்ற தகப்பனார், திடீரென நெஞ்சுவலியால் இறந்து விட்டார். குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் தாயாரான அன்னமரியா மூன் தனது 44 வயதில் ஏற்று நடத்தினார். லோட்டி மூன் கல்வியில் மிகுந்த தேர்ச்சியுற்று முதல் மாணவியாகத் திகழ்ந்தார்.

கீரின்வில்லி ஆலய போதகர் பிராடஸ் 1858–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நற்செய்திக் கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் லோட்டி ஆண்டவராகிய இயேசுவுக்கு தன் வாழ்வை ஒப்புக் கொடுத்து அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டார். லோட்டி மூன் தன்னுடைய முதுகலைப் பட்ட படிப்பை முடித்து ஆலயக் காரியங்களில், சபை ஊழியங்களில் உற்சாகமாக பங்குபெற்று, போதகருக்கு உதவியாக இருந்தார். அவர் ஒரு கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். ஆலயத்திற்கு வந்த பாப்பிஸ்து மிஷனெரிகளின் பணித்தள அறிக்கை லோட்டி மூனை மிகவும் கவர்ந்து அவருடைய ஊழிய பாரத்தை அதிகரிக்கச் செய்தது. லோட்டி மூனின் சகோதரி எடி மூன் ஊழியத்திற்குத் தன்னை அர்ப்பணித்து, மிஷனெரியாக சீனா தேசம் செல்ல முன்வந்தார்.

லோட்டியை விட எடி 10 வயது சிறியவர். மிஷனெரி சங்கத்தார் இளம் பெண்களை பொதுவாக அயல்நாடுகளுக்கு எளிதில் அனுப்புவதில்லை. எனினும், எடி மூனின் மிகுந்த வற்புறுத்தலின் பேரிலும், பெண்கள் சங்கத்தார் எடியை பொருளால் தாங்க முன்வந்ததாலும், எடி மிஷனெரி குடும்பத்தோடு ஜூன் மாதம் 1872–ம் ஆண்டு சீனாவிற்கு மிஷனெரியாகச் சென்றார். தனது தங்கை எடி மூனுடன் சேர்ந்து டெங்சௌ பட்டணத்தில் பணியாற்றி வந்தார் லோட்டி. 1878–ம் ஆண்டு லோட்டி மூன் பெண்களுக்கு என ஒரு பள்ளியை ஆரம்பித்தார். பள்ளி மாணவர்கள் மூலம் பெற்றோருக்கு சுவிசேஷம் அளிக்க இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தினார். ஏனெனில் அவர் இருந்த பட்டணம் அயல் நாட்டவரை மிகவும் வெறுத்தது. மற்றும் பெண்கள் படிப்பதையும் பள்ளி செல்வதையும் எதிர்த்தது. 13 பேருடன் ஆரம்பித்த பள்ளி வேகமாக வளர ஆரம்பித்தது. தனது மிஷனெரி சங்கத்தாருக்கு எழுதி 15 டாலர் செலுத்தி ஒரு மாணவியை தத்தெடுக்க கேட்டுக்கொண்டார்.

நேபுகாத்நேச்சார் வசனித்து: சாத்ராக்; மேஷாக்; ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்: -தானி. 3:28

திருமதி. ஹால்மிஸ் மற்றும் சகோதரி லோட்டி மூன் ஆகியோர் தங்கள் வாழ்நாட்களில் பெரும்பாலான நேரத்தை கிராம ஊழியத்தில் செலவிட்டனர். அவர் காலை முதல் இரவு வரை பொது இடங்களில் இருக்கும் மண்டபம் தெருக்கள் ஆகிய இடங்களில் கழுதை மேல் ஏறிச்சென்று வெயில், மழை, பனி என்று பாராமல் பிரசங்கித்தார். ஜெபம் பண்ணுவதிலும் வேதம் வாசிப்பதிலும் தேவனோடு தரித்திருந்து தேவ பலனைப் பெற்றுக் கொண்டார். ஒரு மாதத்திற்குள் பிங்குவில் துணைப் பணித்தளம் உருவாக்கப்பட்டது. அந்த மக்கள் மத அடிப்படையில் வாழ்ந்தாலும் அவர்கள் இருதயம் சுவிசேஷத்திற்கு திறந்திருந்தது. உள்ளூர் பழக்க வழக்கங்களை விரைவில் கற்றுக்கொண்டு 33 இடங்களுக்கும் மேலாக சுற்றித் திரிந்து சுவிசேஷத்தை அறிவித்தார். பின்பு வட சீனாவிற்கு சென்று ஊழியம் செய்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கிறிஸ்துவை அறிய உழைத்தார். 1890 – ம் ஆண்டில் ஷாலிங்கில் கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்பு வந்தபோது விரைந்து சென்று எதிர்ப்பாளர்களுடன் பேசி, முதலில் என்னைக் கொன்று விட்டு விசுவாசிகளைத் தொடுங்கள் என உறுதியாக இருந்தபடியால் எதிர்ப்பாளர்கள் பின்வாங்கி சென்றுவிட்டனர்.

1893 – ம் ஆண்டில் 8 புதிய மிஷனெரிகள் ஊழியத்தில் லோட்டி மூனுடன் இணைந்தனர். அவர்களில் 3 பேர் திருமணமாகாத பெண்கள். பிங்கு நகரத்தில் ஊழியம் மிகவும் விரிவடைந்து, அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தனர். விசுவாசிகள் லோட்டி மூனுக்கு மிகுந்த அன்பும், மரியாதையும் செலுத்தி வந்தனர். எனினும், அந்த ஊழியத்தைப் புதிதாக வந்த ஊழியர்களிடம் ஒப்படைத்து விட்டு டிங்செள திரும்பினார். லோட்டி மூனின் வீட்டில் பல விசுவாசிகள் பல நாட்கள் தங்குவதுண்டு, அனை வரையும் அன்புடன் ஏற்று உபசரித்து தன்னுடைய சொந்தப் பணத்தை முழுவதும் அவர்களுக்காகவே செலவழித்தார். சீனாவிற்கு அழைக்கப்படாத விருந்தாளியாக பஞ்சம் வந்து அடிக்கடி தலை விரித்தாடியது. ஊழியம் எந்த அளவிற்கு வளர்ந்ததோ, அதே வேகத்தில் கொடிய நோய்களும் பரவியது. லோட்டி மற்றும் உடன் ஊழியர்கள் தங்கள் சுகத்தை மறந்து தைரியமாக முடிந்த அனைத்து உதவிகளையும், பராமரிப்புகளையும் இரவு பகலாகச் செய்தனர். தங்கள் வசம் இருந்த அனைத்துப் பொருட்களும் பணமும் தீருமட்டும் உதவிகளைச் செய்தனர். தன்னையே சீனமக்களுக்கு லோட்டி மூன் கொடுத்தார்.

30 ஆண்டுகள் பணியாற்றிய லோட்டி மூன் தன் சுய விருப்பத்தைத் துறந்து, திருமண வாழ்வைத் துறந்து வாழ்ந்து, இறுதியில் மிகவும் பலவீனப்பட்டார். உட்கார, நடக்க முடியாமலானார். உடனே உடன் ஊழியர் அமெரிக்கா தேசம் கொண்டு செல்லத் தீர்மானித்து ஆயத்தங்களைச் செய்தனர். 1912 – ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 – ம் தேதி கூடியிருந்தோரை அருகில் அழைத்து, சீன முறைப்படி புன்முறுவலுடன் வணக்கம் செலுத்தி அப்படியே தேவ ராஜ்ஜியம் சேர்ந்தார். அவருடைய ஏக்கமெல்லாம் ஆயிரம் ஆயிரமாய் சீன தேச மக்கள் ஆண்டவரை அறியவேண்டும் என்பதே. தேவனுடைய பிள்ளையாகிய நீ யாருக்காக வாழ்கிறாய்!

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். -எபே. 5:4

# MY DEAR MOTHER

**"Her children rise up and call her blessed; Her husband also, and he praises her: - Proverbs 31:28"**

A village woman took her one and a half-year-old son to the river to take bath. She started washing the clothes leaving her son on the bank. She saw a glittering thing floating in the water and went after it. Then she found out that it was only a glittering paper and came back. The child she left on the bank was missing. She searched everywhere but could not find her son. When she was focused on an unimportant thing, she lost her valuable possession.

Today, for many women only office work, TV serials and gossiping seem to be very important. So many women, after their children left for school, finish their household chores in a hurry and sit before the TV to watch serials. There are mothers who send their children for private tuition so that they can watch TV serials without any interruption. The TV people show some rubbish stories to earn their money. What can we say about the mothers who watch these ignoring their important works? Some of them ask their children to watch TV so that they can gossip with neighbors.

What advise the Bible gives to a mother? **"She opens her mouth with wisdom, And on her tongue is the law of kindness"** (Proverbs 31:26). She should admonish the children when they do anything wrong and even use a cane to correct them. At the same time she should show patience and love. Above all she should teach the children the fear of the LORD.

Beloved mothers, it is our duty to protect our children from the womb. Give them the home made healthy food. Don't push it inside him even after he says, "enough". If you are well educated, instruct them yourselves rather than driving them to tuitions. Isn't the concern of the mother on the children's education special? Don't leave the teaching of the Bible to the Sunday school teacher; teach stories from Bible and make them commit scripture portions to heart. Have family prayers. Go to church without fail. If you have daughters, pay special attention to their dresses. In the name of fashion don't buy her revealing dresses. If the children sulk about it, be firm. Don't make the future of the children a question mark by leaving them to the care of maids or nannies. Pray for the children every day. Pray that the Lord should protect them from bad habits and friends.

உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும்
தெரியப்படுத்துங்கள். -பிலி. 4:6

Identify and encourage the talents in your children. Teach them from their young age, to use their talents for the Lord rather than for the world. See to it that they don't use any bad words. Mostly children learn from their parents. Don't talk foul language in front of the children. Don't scold with words like "damn, devil" etc. Don't call them with names of animals. As their names are written in heaven, call them only with their names. Teach them to pray from a very young age. Let them pray in the family prayers. They will learn to pray beautifully when they pray aloud.

**Love in Christ**
**Bro. Sivakumar**

## ஒண் மினிட் ப்லீஸ்



உங்களுக்கு கர்த்தர் தந்த பாடல் பாடக்கூடிய மற்றும் இசைக்கருவி மீட்டக் கூடிய தாலந்தை கர்த்தருக்குப் பயன்படுத்தி, கர்த்தரின் ஆசீரைப் பெற ஆவல் உள்ளவர்கள் நம் சபையின் பாடற்குழு பொறுப்பாளர் சகோ. இயேசு ரெத்தினம் (97545812) அவர்களை அணுகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். தேவைப்பட்டால் வாகனமும் ஒழுங்கு செய்யப்படும்.

## சிரி.... சிந்தி

சிஷ்யனை அடிக்கடி மகனே! மகனே! என்று கூப்பிட்டது தப்பாப்போச்சு...
ஏன்...!!!
ஆசிரம சொத்தில் இப்ப பங்கு கேட்கிறான்!!!

**- அஹமதி தமிழ் திருச்சபை**

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.
சகோ. ஆரோக்கியராஜ் - போன்: 66159784

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
- செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
- செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்
- செல்வி. சித்ரா ராஜன்
- செல்வி. பியூலா ஜெயக்குமார்
- செல்வி. சுஸ்மிதா செல்வதாஸ்
- செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
- செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
- செல்வி. மீனா குமாரி சுகுமார்
- செல்வி. தெபோரா ஆமோஸ்
- செல்வன். பிரவீன்குமார் சாமுவேல்
- செல்வன். ஜோ நிர்மல் டென்சிங்
- செல்வன். மில்டன் பக்தராஜ்
- செல்வன். கதிரவன் சுகுமார்
- Sis. சித்ரா மேரி சாம்சன்
- Sis. மரிய குளோரி தாஸ்
- Sis. ஆனந்தி சாலொமோன்
- Sis. சஜின் ஜீவா ஃபிரான்கிளின்
- Sis. எலிசபெத் ஸ்டாலின்
- Sis. ஜெயா கொம்மையன்
- Sis. அகிலா ராஜா செல்வன்
- Sis. ஜெகதாம்பாள் ராஜவேல்
- Sis. குமுதினி வில்சன்
- Sis. சுகந்தி தம்புகுமார்
- Sis. சவரியம்மா அந்தோனிசாமி
- Sis. குளோரி ஆல்ப்ஸ்ஜேம்ஸ்
- சகோ. ஜோண்ஸ் செல்வசிங்
- சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்
- சகோ. எபெநேசர்
- சகோ. கலியமூர்த்தி
- சகோ. தர்மர்
- சகோ. டேனியல் மாணிக்கம்
- சகோ. கொம்மையன்
- சகோ. ஸ்டீபன். T
- சகோ. ராஜவேல்
- சகோ. சாமுவேல் ஐசக்
- சகோ. ஆசீர்வாதம்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. எபெநேசர்
- திருமதி & திரு. ஸ்டாலின்
- திருமதி & திரு. வில்சன். M
- திருமதி & திரு. எட்வின் சாம்
- திருமதி & திரு. கிரன் குமார்
- திருமதி & திரு. அந்தோனிசாமி
- திருமதி & திரு. தர்மசகாயம்
- திருமதி & திரு. தாமஸ்
- திருமதி & திரு.ஆல்ப்ஸ்ஜேம்ஸ்
- திருமதி & திரு. கொம்மையன்
- திருமதி & திரு. ஜாண் மில்லர்
- திருமதி & திரு. ஈஸ்டர் ராஜ்
- திருமதி & திரு. ஆல்பர்ட். S
- திருமதி & திரு.ஜாண்போஸ்கோ
- திருமதி & திரு. பிரேம்குமார்
- திருமதி & திரு. பால் பாண்டியராஜ்
- திருமதி & திரு. ஜெயசேகர்
- திருமதி & திரு. மனோகரன். P

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். -வெளி. 5:13

# மே 2015 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 03-05-2015 | **சகோ. ஜெயசேகர்** | **சகோ. அசோக்குமார்** |
| 10-05-2015 | **சகோ. ஆரோக்கியதாஸ்** | **சகோ. கிறிஸ்டோபர்** |
| 17-05-2015 | **சகோ. டேவிட் குமார்** | **சகோ. ஜாண் கஸ்டன்** |
| 24-05-2015 | **சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்** | **சகோ. சுகுமார்** |
| 31-05-2015 | **சகோ. ஐசக்துரை** | **சகோ.சாமுவேல்தாசையா** |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 01-05-2015 | **சகோ. டேவிட் குமார்** | **சகோ. ஸ்டாலின்** |
| 08-05-2015 | **தாய்மார்கள் தின ஆராதனை** | |
| 15-05-2015 | **உபவாச திருவிருந்து ஆராதனை** | |
| 22-05-2015 | **சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்** | **சகோ. ஜெகநாதன்** |
| 29-05-2015 | **குடும்ப ஆராதனை** | |
| | **சகோ. ஜெயசேகர்** | **சகோ. வில்சன்** |

சங்கிலி தொடர் ஜெபம்: 07-05-2015 மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை

முழு இரவு ஜெபம்: 14-05-2015 இரவு 10 pm முதல் காலை 2 am வரை

---

பொதுமன்றக் கூட்டம்: 22-05-2015, மாலை, சபையின் ஜெப இல்லம்

---

வாலிபர் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்

பெண்கள் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்.

இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக: அவரே அதிசயங்களைச் செய்கிறவர்.: _சங். 72:18

# நிலவே முகம் காட்டு

நிலவில் முதன் முதலில் கால் வைத்தவர் யார்? என்ற கேள்விக்கு யாராயிருந்தாலும் உடனே பதில் சொல்லிவிடுவார்கள்... ""நீல் ஆம்ஸ்ட்ராங்"" என்று. ஆனால் நிலவில் முதன் முதலில் கால் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா!!! பலருக்கும் தெரியாது என்பதால் தெரிந்ததை நானே சொல்லி விடுகிறேன். அவர் ""எட்வின் சி ஆல்ட்ரின்"" ஆவார். இவர்தான் நிலவுக்கு சென்ற அப்பொல்லோ விண்கலத்தின் பைலட்: அதாவது விமானி. எட்வின் சி ஆல்ட்ரின் என்பவரோ அமெரிக்காவின் விமானப் படையில் பணிபுரிந்தவர். மேலும் விண் நடை அனுபவம் உள்ளவர். அதனால் தான் இவரை பைலட்டாக நியமித்தார்கள். ""நீல் ஆம்ஸ்ட்ராங்"" அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். இவரோ மிகுந்த தைரியசாலியாக இருந்ததனால் இவரும் இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே கோ—பைலட்டாக அதாவது இணை விமானியாக நியமிக்கப்பட்டார்.

இவர்கள் சென்ற அப்பொல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து ""பைலட் ஃபர்ஸ்ட்"" என்று கட்டளை பிறந்தது. ஆனால் ""எட்வின் சி ஆல்ட்ரினுக்கோ மனதில் சஞ்சலமும், தயக்கமும் குடிபுகுந்தது: முதலில் இடது காலை எடுத்து வைப்பதா! அல்லது வலது காலை எடுத்து வைப்பதா! என்று அல்ல. ""நிலவில் முதன் முதலில் கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்துவிட்டால்... அல்லது எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால் என்ற பயமும் கலக்கமுமே காரணமாய் இருந்தது. இந்த பயமும் தயக்கமும் பல மணி நேரம் நீட்டிக்கவில்லை: தாமதிக்கவில்லை.

சற்று நேரத்தில் அடுத்த கட்டளை பிறந்தது, ""கோ—பைலட் நெக்ஸ்ட்"" என்று. ""நீல் ஆம்ஸ்ட்ராங்"" கட்டளை பிறந்த அடுத்த நொடியில் காலடி எடுத்து வைத்தார். உலக வரலாறு ஒரு நொடியில் ஏற்பட்ட தயக்கத்தினால் மாற்றி அமைந்து அது ""நீல் ஆம்ஸ்ட்ராங்""னிடம் ஒட்டிக் கொண்டது. போதுமான திறமையும் தகுதியும் வாய்ப்பும் வசதியும் இருந்தும்கூட தயக்கமும் தாமதமும் ""எட்வின் சி ஆல்ட்ரினை"" உலக வரலாற்றிலிருந்து ஒதுக்கித் தள்ளி விட்டது.

**""நோவா அப்படியே செய்தான்: தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்""** (ஆதி. 6:22). அதனால் தான் நோவாவின் குடும்பம் முழுவதும் பெரு வெள்ளத்தின் அழிவிலிருந்து காக்கப்பட்டார்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நாமும் வாழும் போது அழிவில்லா நித்திய ஜீவ கிரீடத்தைப் பெறுவோம் என்பது அதிக நிச்சயம். ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கொம்மையன்**

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்; ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். –கொலோ. 4:2

# வாள் (வசனம்) வீச்சு

## உதவி செய்

உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்து கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவி செய்வாயாக (யாத். 23:5).

கர்த்தர் உங்களைப்போல உங்கள் சகோதரரையும் இளைப்பாறப்பண்ணி, அவர்களும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கும் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுமட்டும், அவர்களுக்கு உதவி செய்யக்கடவீர்கள்: (யோசு. 1:15).

உமக்குச் சமாதானம், சமாதானம்: உமக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம்: உம்முடைய தேவன் உமக்குத் துணை நிற்கிறார் என்றான்: (1நாளா. 12:18).

அக்காலத்திலே நாளுக்கு நாள் தாவீதுக்கு உதவி செய்யும் மனுஷர் அவனிடத்தில் வந்து சேர்ந்தபடியால், அவர்கள் தேவசேனையைப்போல மகா சேனையானார்கள் (1நாளா. 12:22).

ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்: (சங். 128:1—2).

ஆசாரியர்கள் கொஞ்சம் பேரானதினால் அவர்களால் அந்தச் சர்வாங்க தகன மான ஜீவன்களையெல்லாம் அடித்துத் தோலுரிக்க முடியாதிருந்தது: அதினாலே அந்த வேலை தீருமட்டாகவும், மற்ற ஆசாரியர் தங்களைப் பரிசுத்தம் பண்ணுமட்டாகவும், அவர்கள் சகோதரராகிய லேவியர் அவர்களுக்கு உதவி செய்தார்கள்: (2நாளா. 29:34).

நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்: நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச் சொன்னான் (எஸ். 4:14).

கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களை விடுவிப்பார்: அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார் (சங். 37:40).

நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்: கர்த்தரோ எனக்கு உதவி செய்தார் (சங். 118:13).

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் (ரோம. 8:26).

அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபி. 2:18).

ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. _கொலோ. 2:7

இன்றைய தகவல்

# அழகே உன்னை

**"லிஷ்ஷி வெலாஷ்குவெஸ்""** எனப்படும் உலகில் மிகவும் அவலட்சணமான பெண் உயர் பள்ளியில் படிக்கும் போது ""யு டியூப் (You Tube)"" —ல் தன்னைப் பற்றி 8 செக்கன்ட்களுக்கு எடுக்கப்பட்ட வீடியோவை வெளியிட்டிருந்தார். (தற்போது இந்த வீடியோ தடை செய்யப்பட்டுள்ளது). இவர் பிறக்கும் போதே இவருக்கு முகத்திலும் உடல் பகுதியிலும் தோலை இணைக்கும் தசைகள் இல்லை. அதனால் தோல்கள் தொங்கிக் கொண்டிருப்பதோடு இவருக்கு சக்தியைச் சேமிக்கவோ, பாரத்தைத் தூக்கவோ முடியாது. இவரது உடலில் கொழுப்புச் சக்தியின் அளவு வெறும் பூஜ்ஜியம் என்பதுடன் இவரது எடை வெறும் 60 பவுண்ட்ஸ் ஆகும். இக்குறைபாடு உடையவர் இவரை தவிர உலகில் இன்னும் இரண்டு பேருக்கே இப்படிப்பட்ட வியாதி காணப்படுகின்றது என்றும் கூறப்படுகிறது.

""யு டியூப் (You Tube)"" —ல் இவரது வீடியோவுக்கு கமெண்ட் பண்ணியிருக்கும் வாசகர்களில் சிலர் அவரை ஒரு Monster எனவும், இப்படி வாழ்வதற்கு சாவது மேல் எனவும் அவர் வருந்தும் விதத்தில் தெரிவித்திருந்தனர். எனினும் இப்பெண்ணின் இலட்சியம் அசாதாரணமானது. இவருக்கு நான்கு இலக்குகள் இருந்தனவாம்...

1. அனைவரையும் ஈர்க்கும் விதத்தில் பேசும் வல்லமையைப் பெறுதல்.
2. ஏதேனும் துறையில் ஒரு புத்தகமாவது வெளியிடல்.
3. கல்லூரியில் ஏதேனும் பட்டம் பெறுதல்.
4. தனக்கென ஒரு குடும்பம் மற்றும் வேலை பெறுதல்.

தற்போது 24 வயதாகும் இப்பெண்மணி 8 வருடங்களாக சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்து வருவதுடன் 200 —கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்தியுள்ளார். மேலும் சான் மார்க்கோஸ் —ல் உள்ள டெக்ஸாஸ் மாநில பல்கலைக் கழகத்தில் தகவல் தொடர் பாளர் பிரிவில் மூத்த உறுப்பினராக உள்ளார். இவர் வெளியிட்ட முதல் புத்தகம் "Lizzie Beautiful" 2010—ல் வெளி வந்தது. மேலும் கடந்த ஆண்டின் தொடக்கத்தில் இவரது இரண்டாவது புத்தகம் "Be Beautiful, Be You" வெளியாகி உள்ளது.

சமீபத்தில் இவர் CNN செய்தி ஸ்தாபனத்துக்குப் பேட்டியளிக்கையில் என்னிடம் வரும் மக்களிடம் நான் ""என் அழகைப் பார்க்காதீர்கள். என்னிடம் இருந்து என்ன கற்றுக் கொள்ள முடியும் என்று பாருங்கள் என்று சொல்வதற்கே நான் விரும்புகிறேன்" என்கிறார். வெளி உலகுக்கு வரவே தயக்கம் கொள்ளும் இத்தகைய குறைபாடுகள் மிக்க மனிதர்கள் மத்தியில் இப்பெண்மணி ஒரு சாதனைச் சிகரம் என்று சொல்லலாமா!. **""உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்; ராஜாக்கள் உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்குவேன்""** (எசே. 28:17) என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறதே!.

**– அஹமதி தமிழ் திருச்சபை**

ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள். –மத்.26:30

# அர்த்தமுள்ள கேள்விகள்

கேள்விகள் கேட்பது என்பது சிலருக்கு கை வந்த கலை. ஏன் கேட்கிறோம் என்று தெரியாமல் சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்போர் பலர் உண்டு. எவ்வளவுதான் படித்திருந்தாலும் சிக்கவைக்கும் திணறடிக்கும் கேள்விகள் தேர்வுத் தாளில் வருவது இயல்பே. அதனால் தான் கேள்விக்குறி கொக்கி வடிவத்தில் உள்ளதோ? அது போகட்டும்: நம்முடைய வேத புத்தகத்தை திருப்புவோம். வேதத்தில் தான் எத்தனை எத்தனை அழகான கேள்விகள்? கேள்விகளோடு நின்றுவிடாமல் அருமையான ஆவிக்குரிய பதிலையும் தரும் அழகு நமது வேத புத்தகத்திற்கு உண்டு என்பதில் நாம் பெருமிதம் கொள்ள வேண்டும். வேதத்திலிருந்து மிக முக்கியமான ஒரு கேள்வியை இனிய பதிலோடு தியானிக்க உங்களை அழைத்துச் செல்கிறேன்.

சிறைச்சாலைக்காரன் அவன் பட்டயத்தால் தற்கொலை செய்து வாழ்வை முடித்துக் கொள்ள முயன்றவன் இப்பொழுது திகைத்து, நடுங்கி இந்த கேள்வியைக் கேட்கிறான்... இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? இன்று தற்கொலைதான் வாழ்வின் பிரச்சனைகளுக்கு முடிவு என்று முடிவு செய்வோர் உலகில் பலர் உண்டு. அன்று பவுல் மிகுந்த சத்தமிட்டு சிறைச்சாலைக்காரனை தடுத்து நிறுத்தினான். சகோதரனே! சகோதரியே! இன்று தற்கொலையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் மாந்தரை தடுத்து நிறுத்தும் பவுல் யாரென்றால்! நீயும் நானும்தான். பாவக் கயிறுகளால் செத்துக் கொண்டிருப்போரை இன்று மீட்கும் பொறுப்பு நம்முடைய கையில் தான் இருக்கிறது.

வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்பிய சிறைச்சாலைக்காரன் கேட்கிற கேள்வி, **""இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்""** (அப். 16:30) என்று. பிரச்சனை மேல் பிரச்சனை... என்ன செய்வது? பாவம் தலைவிரித்தாடும் இந்த உலகில் எப்படி வாழ்வது? ஒருவேளை பலரும் இப்படி யோசிக்கலாம். சிறைச்சாலைக்காரன் போல அருமையான கேள்வியை நாம் ஒவ்வொரு நாளும் பலவித சூழ்நிலையிலும் கேட்க வேண்டும். நாண்பர்கள் இரட்சிக்கப்பட வேண்டும்: பாவம் நிறைந்த என் தேசம் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கம் இன்னும் நம்மில் பலருக்கும் உண்டு.

இரட்சிப்பைக் குறித்து அறிந்திராத சிறைச்சாலைக்காரனின் காதுகளில் பதில் தொனிக்கிறது: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு இந்த உலகத்தில் வந்தார். நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது நம்முடைய வாழ்வில் இரட்சிப்பின் ஒளி பிரகாசிக்க ஆரம்பிக்கிறது. அவருடைய சத்தத்திற்கு செவி கொடுக்கும் போது அவர் நமக்குள் வாசம் செய்கிறார். பாவ இருள் நம்மை அண்டுவது இல்லை. அன்று பவுலும் சீலாவும் சிறைச்சாலைக் காரனையும் அவன் வீட்டாரையும் இரட்சிப்புக்குள் வழி நடத்தினார்கள். இரட்சிப்பு என்றால் எவ்வளவு விலை என கேள்வி கேட்கும் மனிதர் இன்னும் பலர் உண்டு. இயேசு என்கிற ஒளியைக் குறித்து அவர்களுக்குச் சொல்வதில் நம்முடைய பங்கு என்ன? சிந்திப்போம்! செயல்படுவோம்!1

**அன்புள்ள சகோதரன்**

**கிறிஸ்டோபர் தேவராஜ்**

தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி; ஸ்தோத்திரம் செலுத்தினான். -தானி. 6:10



# பதில் சொல்லுங்கள் பார்ப்போம்!

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. அவர் (இயேசு) பாடுபட்ட பின்பு எத்தனை நாளளவும் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானார்?
2. பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே எத்தனை வருடங்கள் தங்கி இருந்தார்?
3. யார் பவுலினிடத்தில் வந்து நீ ரோமனா என்று கேட்டது?
4. யார் பவுலை கல்லெறிந்து அவன் மரித்துப்போனான் என்று எண்ணினார்கள்?
5. தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயும் இருந்தது யார் யார்?
6. சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி யாருடைய பாதத்தின் அருகே வைத்தார்கள்?
7. நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாது என்று யார் சொன்னது?
8. கர்த்தருடைய ஆவியானவரால் பிலிப்பு காணப்படாமல் போய் பின்பு எங்கே காணப்பட்டார்?
9. சீஷர்கள் பவுலை எதில் வைத்து மதில் வழியாக இறக்கி விட்டார்கள்?
10. முதல் முதல் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கின்ற பேர் எங்கே வழங்கப்பட்டது?
11. பர்னபாவும், சவுலும் எந்த ஊழியத்தை நிறைவேற்றினார்கள்?
12. யுஸ்துவின் வீட்டில் பவுல் எவ்வளவு நாட்கள் தங்கியிருந்து தேவ வசனத்தை உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தான்?
13. எந்த பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருந்தது?
14. பவுல் படிகளின் மேல் ஏறி நின்று எந்த பாஷையிலே அவர்களோடு பேசத் தொடங்கினான்?
15. அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலின் பெயர் என்ன?

குறிப்பு:- வேதாகமத்தில் அப்போஸ்தலர்கள் நடபடிகளில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 22-05-2015 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

---

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. எபிநேசர் _ போன்: 66857827

நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக் கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். _சங். 124:6

# நீங்களும் மருத்துவர்

☐ ஒரு டம்ளர் வெந்நீரில் ஒரு ஸ்பூன் சர்க்கரை, ஒரு ஸ்பூன் நெய் விட்டு கலக்கிக் குடித்தால் வயிற்று வலி மாயமாய் மறைந்துவிடும்.

☐ உடல் பருமனைக் குறைக்க இரவு ஒரு ஸ்பூன் ஓமத்தை தண்ணீரில் போட்டு காலையில் வடிகட்டி ஒரு ஸ்பூன் தேனுடன் கலந்து குடித்து வந்தால் போதும்.

☐ அவரை இலையை அரைத்து தினமும் காலையில் முகத்தில் தடவி வந்தால் முகத்தில் இருக்கும் தழும்புகள், முகப்பருக்கள் நீங்கிவிடும்.

☐ பால் கலக்காத தேநீரில் தேன் விட்டுக் குடித்தால் தொண்டைக்கட்டு சரியாகும்.

☐ சுக்கை தூளாக்கி எலுமிச்சை சாறில் கலந்து தின்றால் பித்தம் குறையும்.

☐ மூட்டு வலியா? தேங்காய் எண்ணெய் மற்றும் எலுமிச்சை சாறை கொதிக்கவிட்டு ஆறியபின் மூட்டுக்களில் தேய்த்தால் நிவாரணம் கிடைக்கும்.

☐ துளசி இலை போட்ட நீரை தினமும் குடித்து வந்தால் ஞாபக மறதி நீங்கி மூளை பலம் பெறும்.

☐ மிளகுத் தூளுடன் நெய், வெல்லம் கலந்து உருண்டையாக்கி சாப்பிட்டுவர தொண்டைப்புண் குணமாகும்.

☐ வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி, பனங்கற்கண்டு சேர்த்து வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி நீங்கும்.

☐ பொடித்த படிகாரத்தை தூள் செய்து அதை கொண்டு வாரம் மூன்று முறை பல் தேய்த்து வந்தால் பற்களின் கறை, இரத்தம் வடிதல், வாய் துர்நாற்றம் நீங்குவதோடு பல் ஈறுக்கும் வலு கொடுக்கும்.

☐ வயிற்றுப் போக்கு அதிகமாக இருந்தால் ஜவ்வரிசியை சாதம் போல் வேகவைத்து மோரில் கரைத்து உப்பு போட்டு சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு நின்றுவிடும். வயிற்றில் வலியும் இருக்காது.

☐ உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்கள் தினசரி ஒரு ஸ்பூன் தேன் சாப்பிட்டு வந்தால் உடம்பு பலம் பெறும்.

☐ வாயில் புண் இருந்தால் வயிற்றிலும் இருக்கலாம். தினமும் காலையிலும் மாலையிலும் தேங்காய் பாலில் தேனை விட்டு சாப்பிட்டால் புண் ஆறிவிடும்.

☐ அஜீரணத்திற்கு இரண்டு ஸ்பூன் குருவேப்பிலை சாறை ஒரு டம்ளர் மோரில் கலந்து குடித்தால் அஜீரணம் நீங்கும்.

☐ அதிக தலைவலி இருக்கும் போது ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி மூடி கொதிக்க வைத்து இறக்கி இரண்டு ஸ்பூன் காபி பவுடர் போட்டு ஆவி பிடித்தால் தலைவலிக்கு உடனடி நிவாரணம் கிடைக்கும்.

# ஒரு அன்பான அறிவிப்பு

**ஏப்ரல் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்களின் பெயர்களும் அதன் பதில்களும் அடுத்த மாத இதழில் இடம் பெறும் என்பதை மிகவும் பணிவன்புடன் தெரிவிக்கிறோம்.**

# ஆண்டவர் சொல்லிப் போன மூன்று கடமைகள்




மரணம் வென்று ஜெயித்தெழுந்த இயேசு நாதர்
மீண்டுமாக சீடருக்கு காட்சி தந்து
மூன்று கடமைகள் முக்கியமாய் எடுத்துரைத்தார்
மறவாமல் அவைகளை நாம் கடைபிடிப்போம்

மாறாத விசுவாசம் நெஞ்சில் பூண்டு
மற்றவருக்கு சுவிசேஷம் நவிலல் வேண்டும்
பரிசுத்த ஆவியின் துணையைக் கொண்டு
பாங்குடனே சாட்சியாக வாழ்ந்திடல் வேண்டும்

ஆயத்த பாதரட்டை கால்களில் தொடுத்து
ஆவலாக ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக
ஆசையாக காத்திருப்போம் பரிசுத்தத்தோடு
அழியாத ஜீவ கிரீடம் பரமன் தந்திடுவார்.

**- ஸ்டாலின்**



## இஞ்சி சாப்பிட்டால்!

**குவைத் பாட்டி**

இஞ்சி நரம்பை பலப்படுத்தும். இதய நோய் ஏற்படாமல் தடுக்கும். தலைச் சுற்றல் வாந்தி மயக்கம் ஏற்படாது. இதயத்தைப் பலப்படுத்தும். பக்கவாதம் மறறும் மாரடைப்பு ஏற்பட காரணமான இரத்த கட்டிகள் ஏற்படுவதைத் தடுக்கும். இஞ்சி வலிப்பு நோயை கட்டுப்படுத்தும் என்று தற்போது டென்மார்க் ஓடன்ஸ் பல்கலைக்கழகம் கண்டு பிடித்திருக்கிறது.

இஞ்சி சாறு பசியை தூண்டும். இருமலை குணமாக்கும். இது உடலின் பலத்தை அதிகரித்து அழகை கூட்டும் என்றும் மருத்துவர் கூறுகின்றனர். இஞ்சியிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயானது வாத நோய்களை குணமாக்க பயன்படுத்தப்படுகிறது. இஞ்சித் துண்டை பல் வலியுள்ள இடத்தில் வைத்து தேய்த்தால் பல்வலி மட்டுப்படும். இஞ்சி சாறுடன் தேன் கலந்து குடித்துவர தொந்தி குறையும். மஞ்சள்காமாலை, ஆஸ்துமா மற்றும் புற்று நோய்களுக்கு இஞ்சி எதிரி என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: சுதந்தரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் -ரூத். 4:14

# பார்வைகள் பலவிதம்



ஒரு ஊரில்

மைக்கேல் ஏஞ்சலோ என்ற ஓர் அற்புதமான சிற்பி. ஒரு நாள் தெருவில் போய்க் கொண்டிருந்தவர் ஒரு கடையருகே கனத்த பாறாங்கல் ஒன்றுஅநாதையாய் கிடப்பதை பார்த்தார். ஏதோ பெரிய புதையலைப் பார்த்த மகிழ்ச்சியுடன் அந்த கடைக்காரரிடம் ஐயா! இந்த பாறாங்கல் தங்களுக்குத் தேவையா! அல்லது இதை நான் எடுத்துச் செல்லட்டுமா! என்று கேட்டார். உடனே தாராளமாய் இதை எடுத்துக் கொண்டு செல்லுங்கள்: இது இந்த இடத்தில் பெரிய இடையூறாய் இருக்கிறது. போவோர் வருவோரெல்லாம் இடறி விழுகின்றனர். அநேகருடைய இரத்தமும் இதனால் இவ்விடத்தில் சிந்தப்பட்டிருக்கிறதுஹ என்றார் கடைக்காரர்.

பாறாங்கல்லை மன நிறைவோடும் மகிழ்வோடும் அங்கிருந்து உருட்டிச் சென்று ஏஞ்சலோ தன் கூடாரத்தில் கொண்டு சேர்த்தார். சிற்பியான ஏஞ்சலோ கல்லை சற்று உற்று நோக்கினார். கல் தன் உள்ளத்தில் எண்ணினது... சும்மா தெருவில் தள்ளப்பட்டு, அநேகரால் நிந்திக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட என்னை நீர் மட்டும் எப்படி புன்முறுவலோடு நோக்கிப் பார்க்கிறீர்! என்னை என்ன செய்யப் போகிறீர்! எனக்கு மேன்மேலும் பாடுகள் தானா! என்று பெருமூச்சுவிட்டு நின்றது.

மீண்டும் புன்னகையை தன் உதடுகளால் உதிர்த்துவிட்டு உளியை தன் கரங்களில் எடுத்துக் கொண்டார். தன் எண்ணத்திலும் மன வண்ணத்திலும் தீர்மானித்தபடி கரங்களிலுள்ள உளியினால் பாறாங்கல்லின் தேவையற்ற பகுதிகளை பக்குவமாய், ரம்யமாய் நீக்கத் தொடங்கினார். சிற்பி உளியை ஒவ்வொரு முறையும் தன் மீது வைத்து செதுக்கும் போதும் பாறாங்கல் தனக்குள் ஏற்படும் மரண வேதனையை தன்னகத்தே மறைத்துக் கொண்டு பொறுமையாய் தன்னை அர்ப்பணித்து இடையூறு செய்யாமல் ஒத்துழைத்து காத்திருந்தது: சில நாட்கள் பொறுத்திருந்தது.

குறித்த நாட்களுக்குப்பின் அந்த பாராங்கல்லிலிருந்து **““உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின்””** சிலையொன்று சிற்பியால் உருவாக்கப்பட்டது. இந்த சிலை பார்ப்பவர் இதயங்களையெல்லாம் மிகவும் கவர்ந்திழுத்தது. அநேகர் அதை விலை கொடுத்து வாங்கத் துடித்தனர். அநேகர் அதை வாங்க போட்டி போட்டுக் கொண்டு முன்வந்ததால் சிலையை ஏலத்தில்விட தீர்மானித்தார் அந்த சிற்பி. ஏலம் தொடங்கியது... பல மடங்காய் பெருகி, சிலைக்கு கோடிகள் குவிந்தன: புகழ் எத்திசையும் பறந்து பெருகின. நீயும் தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்டு, அநேகரால் நிந்திக்கப்பட்டு, அவமானப்பட்டு அவலநிலையில் இருக்கிறாயா! தொடர்ந்து வேதனையும் வலியும்தான் என் வாழ்க்கை என்று எண்ணுகிறாயா!

**““தேவனே, எங்களைச் சோதித்தீர்: வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர். எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்: தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்: செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்””** (சங். 66:10 – 12) என்று சங்கீதக்காரனாகிய தாவீது ராஜா சொல்லுகிறது போல, **““அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்””** (எபி. 2:18). பாறாங்கல்லுக்கு வந்த மேன்மையையும் புகழையும் காட்டிலும் தேவசாயலாய் சிருஷ்டிக்கப்பட்ட நம்மை தாவீது சொன்னதுபோல செழிப்பான இடத்தில் கர்த்தர் நம்மை கொண்டு சேர்ப்பதும்: சோதிக்கப்படுகிற நமக்கு கர்த்தர் உதவி செய்வதும் அதிக நிச்சயம் அல்லவா!. நம் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்

**கர்த்தரின் கிருபையில்**
**அ.்.பியா ஆ. தாஸ்**

உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். -ஆதி. 40:20

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஜெயசேகர்
23711698 / 96646444

**பொருளாளர்**
சகோ. ஆரோக்கிய தாஸ்
99870126

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அந்புதராஜ்
60692485



Bro. கிரன் குமார் & Sis. ஜரின் நிஷா
தம்பதியரின் குழந்தை பிரதிஸ்டை

**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

**——(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait**

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com**

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 99259975

Private Circulation only